# News Release

# வாகன் நகரின் வின்டர்ஃபெஸ்ட் கொண்டாட்டம் இரட்டிப்பு மகிழ்ச்சியுடன் திரும்புகிறது!

*பிப்ரவரி 1 மற்றும் 2 ஆம் தேதிகளில் வெள்ளூர் கிராம சமூக மையத்தில் எங்களுடன் இணைந்திடுங்கள்*

**வாகன், (13 ஜனவரி 2025) அன்று** – மக்களின் அமோக வரவேற்பைப் பெற்ற தி சிட்டி ஆஃப் வாகனின் 35வது ஆண்டு, விருது பெற்ற நிகழ்வான வாகனின் வின்டர்ஃபெஸ்ட் மீண்டும் தொடங்கியுள்ளது!

TD மற்றும் நிகழ்ச்சி வழங்குநர் டிம் ஹார்டன்ஸ் ஆகியோரால் வழங்கப்பட்ட இந்த நிகழ்வு தற்போது மேலும் விரிவடைந்து வருகிறது! **இந்த ஆண்டுப் புதியதாக, இந்த நிகழ்வு இரண்டு நாட்கள் நடைபெறவுள்ளது** - பிப்ரவரி 1 சனிக்கிழமை மாலை 4 மணி முதல் இரவு 8 மணி வரையிலும், மற்றும் பிப்ரவரி 2 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணி முதல் பிற்பகல் 3 மணி வரையிலும் - வெள்ளூர் கிராம சமூக மையத்தில் (1 வில்லா ராயல் அவென்யூ) நடைபெறும். வானிலைக்கு ஏற்ற ஆடைகளை அணிய மறக்காதீர்கள்!

நீங்கள் எதிர்பாக்கக்கூடிய அனைத்துக் கேளிக்கை நிகழ்ச்சிகளின் பட்டியல் இதோ:

**பிப்ரவரி 1, சனிக்கிழமை**
மேயர் ஸ்டீவன் டெல் டுகா மற்றும் கவுன்சில் உறுப்பினர்கள் இந்த ஆண்டு நிகழ்வை வரவேற்புடன் அதிகாரப்பூர்வமாகத் தொடங்கி வைப்பார்கள், அதனைத் தொடர்ந்து அனைத்து வயதினரும் ரசிக்க அனைவரும் பங்கேற்கும் பல்வேறு நேரடி பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளது, இதில் ஃப்ரோசன் இன் டைம் இசைக்குழுவுடன் இனைந்து படுவதற்கான பாடல் நிகழ்ச்சி மற்றும் உள்ளூர் இசைக்குழு நீல் டானியின் இசை நிகழ்ச்சிகளும் அடங்கும்.

சனிக்கிழமை அன்று நடைபெறவுள்ள கூடுதல் வெளிப்புறச் செயல்பாடுகளில் பின்வருபவை அடங்கும்:

- ஃபையர் பிட்ஸ்
- உணவு விற்பனை
- இலவச கேளிக்கை சவாரிகள்

- டச்-எ-ட்ரக்
- நேரடி பனி சிற்பக் காட்சி

**பிப்ரவரி 2, ஞாயிற்றுக்கிழமை**
உற்சாகம் இப்போதுதான் தொடங்குகிறது! காலை 10 மணி முதல் 11 மணி வரை இலவச பான்கேக் காலை உணவுடன் தொடங்கி (உணவு இருக்கும் வரை), நாள் முழுவதும் குளிர்காலக் கொண்டாட்டங்களுக்குத் தயாராகுங்கள். மதியம் 1 மணி முதல் பிற்பகல் 3 மணி வரை இலவச உள்ளரங்கு நீச்சல் மற்றும் உயிர்காக்கும் திறன் நடவடிக்கையிலும் நீங்கள் பங்கேற்கலாம். இது உங்களுக்கான நிகழ்ச்சி இல்லை என்று நினைக்கின்றீர்களா? அப்படியானால், பின்வரும் இலவச பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளை நாள் முழுவதும் நிதானமாக அனுபவிப்பதற்காக உங்களை அழைக்கிறோம்:

- ஜோசப் மோடிகி, (ரீச் ஃபார் தி டாப் மற்றும் கேம் குருஸ் ஆகியவற்றிற்குப் பெயர் பெற்றவர்)
- டான்ஸ் ஸ்ட்ரீமின் நடன நிகழ்ச்சிகள்
- எக்கோஸ் மற்றும் ஐகான்ஸின் டிஸ்னி இசை மற்றும் கதைசொல்லல் காட்சிப்படுத்தல்
- உள்ளூர் இசைக்குழு AV-OX-இன் இசை நிகழ்ச்சி
- டெய்லரின் கதை: டெய்லர் ஸ்விஃப்ட்டுக்காக ஒரு அஞ்சலி
- கேர் பியர்ஸ் உடன் சந்தித்து வாழ்த்துங்கள்

ஞாயிற்றுக்கிழமை கூடுதல் உள்ளரங்கு மற்றும் வெளிப்புற நடவடிக்கைகளில் பின்வருவன அடங்கும்:

- எர்த் ரேஞ்சர்ஸ் உடனான விலங்கு செயற்காட்சி/கல்வி அமர்வு
- மெழுகுவர்த்தி தயாரிக்கும் பயிலரங்கு
- குழந்தைகளுக்கான பொறியியல் பயிலரங்கு
- ஃபையர் பிட்ஸ் மற்றும் முஸ்கோகா சேர்ஸ்
- உணவு டிரக்குகள்
- இலவச கேளிக்கை சவாரிகள்
- மாபெரும் விளையாட்டுகள்
- பரிசளிப்பு நிகழ்ச்சிகள்
- குதிரை வண்டி சவாரி
- மேட் சயின்ஸ் வேடிக்கை நிலையம்
- சுற்றி நகரும்/உலாவும் பொழுதுபோக்கு கலைஞர்கள் மற்றும் நிகழ்த்துநர்களின் பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள்
- பனிச்சறுக்கு (வானிலை சார்ந்தது) மற்றும் சறுக்கு
- விளையாட்டுகள்
- டச்-எ-ட்ரக்

- விற்பனையாளர்கள்
- மற்றும் இன்னும் பல!

**பார்க்கிங் மற்றும் ஷட்டில் பற்றிய தகவல்**

பிப்ரவரி 1 ஆம் தேதி சனிக்கிழமை பிற்பகல் 3 மணி முதல் இரவு 9 மணி வரையிலும், பிப்ரவரி 2 ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரையிலும் வாகன் மெட்ரோபாலிட்டன் சென்டர் பகுதி (200 ஆப்பிள் மில் ரோடு), எமிலி கார் செகண்டரி ஸ்கூல் (4901 ரதர்ஃபோர்ட் ரோடு) மற்றும் வாகன் சிட்டி ஹால் (2141 மேஜர் மெக்கன்சி டாக்டர்) ஆகிய இடங்களிலிருந்து ஷட்டில் பேருந்துகள் இயக்கப்படும்.

ஃபோசில் ஹில் பப்ளிக் ஸ்கூல் (2 ஃபயர்ன்சா ரோடு) மற்றும் செயிண்ட் வெரோனிகா கத்தோலிக்க எலிமேன்டரி ஸ்கூல் (171 மரியா அன்டோனியா ரோடு) ஆகியவற்றிலும் பார்க்கிங் வசதி உள்ளது.

செயிண்ட் ஜீன் டி பிரெபியூஃப் கத்தோலிக் ஹை ஸ்கூலில் (2 டாவோஸ் ரோடு) மாற்றுத்திறனாளிகளுக்கான முன்பதிவு பார்க்கிங் வசதி உள்ளது.

**இந்த நிகழ்வின் ஒரு அங்கமாக உங்களின் வணிகமும் இடம்பெற விண்ணப்பிக்கவும்!**

நீங்கள் வின்டர்ஃபெஸ்டில் பங்கேற்க விரும்பும் ஒரு தொழிலதிபரா அல்லது உணவு விற்பனையாளரா? இந்த ஆண்டு நிகழ்வில் உங்கள் வணிகத்தை விளம்பரப்படுத்த அல்லது பொருட்கள் அல்லது உணவை விற்பனை செய்வதற்கான பூத் அமைப்பதற்கான ஆன்லைன் படிவத்தை 15 ஜனவரி, புதன்கிழமைக்குள் நிரப்பவும்.

இந்த ஆண்டு வின்டர்ஃபெஸ்ட் பற்றிய கூடுதல் தகவலுக்கு, vaughan.ca/**winterfest**-ஐப் பார்வையிடவும் அல்லது vaughancelebrates@vaughan.ca என்ற மின்னஞ்சல் முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்பவும்.

**மேற்கோள்**

“வாகன் செலிபிரேட்ஸ் வின்டர்ஃபெஸ்ட் அதன் 35வது ஆண்டாக மீண்டும் வருவதில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்! இந்த வருடம், வெள்ளூர் கிராம சமூக மையத்தில் பிப்ரவரி 1 சனிக்கிழமை மற்றும் பிப்ரவரி 2 ஞாயிற்றுக்கிழமை ஆகிய இரண்டு நாட்கள் நடைபெற உள்ளதால் இந்த நிகழ்ச்சி இரட்டிப்பு மகிழ்ச்சியைத் தரும். இந்த இலவச நிகழ்வு பலருக்கும் அவர்களது நண்பர்கள், குடும்பத்தினர் மற்றும் அண்டை வீட்டாருடன் இணைத்துப் பருவத்தைக் கொண்டாடும் ஒரு வருடாந்திர பாரம்பரியமாகவே இந்நிகழ்வு

மாறியுள்ளது. எனவே, குளிர்கால அதிசயத்தின் வார இறுதியைக் கொண்டாடத் தயாராகுங்கள்! பிரதான மேடையில் அனைத்து வயதினருக்கும் பொழுதுபோக்கு, வசதியான ஃபையர் பிட்ஸ், உணவு விற்பனையாளர்கள், டச்-எ-ட்ரக் அனுபவம், கேளிக்கை சவாரிகள், இலவச பான்கேக் காலை உணவு மற்றும் பலவற்றைப் பார்க்கவும் செய்யவும் நிறைய இருக்கிறது. உங்களை நிகழ்வில் பார்த்துக் குளிர்காலத்தை ஒன்றாகக் கொண்டாட ஆவலுடன் காத்திருக்கிறேன்!"
- மேயர் ஸ்டீவன் டெல் டுகா

**விரைவுச் செய்தி**

- இந்த ஆண்டு நடைபெறும், வாகன் நகரின் வின்டர்ஃபெஸ்ட் கொண்டாட்டம் இரண்டு நாட்கள் நடைபெறவுள்ளது, இது பிப்ரவரி 1 சனிக்கிழமை மாலை 4 மணி முதல் இரவு 8 மணி வரையிலும், பிப்ரவரி 2 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணி முதல் மாலை 3 மணி வரையிலும் வெள்ளூர் கிராம சமூக மையத்தில் (1 வில்லா ராயல் அவென்யூவில்) நடைபெறுகிறது.
- அனைத்து பங்கேற்பாளர்களையும் வரவேற்க, பிப்ரவரி 1 சனிக்கிழமை பிற்பகல் 3 மணி முதல் இரவு 9 மணி வரையிலும், பிப்ரவரி 2 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரையிலும் வாகன் மெட்ராப்பாலிட்டன் சென்டர் (200 ஆப்பிள் மில் ரோடு), எமிலி கார் செகண்டரி ஸ்கூல் (4901 ரதர்ஃபோர்ட் ரோடு) மற்றும் வாகன் சிட்டி ஹால் (2141 மேஜர் மெக்கன்சி டாக்டர்) ஆகியவற்றிலிருந்து ஷட்டில் பேருந்துகள் இயக்கப்படும்.
- ஃபோசில் ஹில் பப்ளிக் ஸ்கூல் (2 ஃபயர்ன்சா ரோடு) மற்றும் செயிண்ட் வெரோனிகா கத்தோலிக்க எலிமேன்டரி ஸ்கூல் (171 மரியா அன்டோனியா ரோடு) ஆகியவற்றிலும் பார்க் அண்ட் வாக் வசதி உள்ளது.
- செயிண்ட் ஜீன் டி பிரெபியூஃப் கத்தோலிக் ஹை ஸ்கூலில் (2 டாவோஸ் ரோடு) மாற்றுத்திறனாளிகளுக்கான முன்பதிவு பார்க்கிங் வசதி உள்ளது.
- 1989 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட, விருது பெற்ற வாகன் செலிபிரேட்ஸ் வின்டர்ஃபெஸ்ட், பிரபலமான மற்றும் மிகவும் எதிர்பார்க்கப்பட்ட வாகன் நகர பாரம்பரியமாக வளர்ந்துள்ளது.

**மேலும் அறிக**

- வாகன் கொண்டாடுகிறது வின்டர்ஃபெஸ்ட் வலைப்பக்கம்

-30-

**வாகன் பற்றி:** வாகன் நகரம் கனடாவின் வேகமாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றாகும், இதன் மக்கள் தொகை 344,412-க்கும் அதிகமாக உள்ளது. 1991-இல்

# News Release

இணைக்கப்பட்ட வாகன், கான்கார்ட், க்ளீன்பர்க், மேப்பிள், தோர்ன்ஹில் மற்றும் வுட்பிரிட்ஜ் சமூகங்களை உள்ளடக்கியது. இந்தக் கலாச்சார ரீதியாகப் பன்முகத்தன்மை கொண்ட நகராட்சி, யார்க் பிராந்தியம் மற்றும் கிரேட்டர் டொராண்டோ பகுதியின் மையத்தில் அமைந்துள்ளது.

**ஊடக தொடர்புக்கு:** கேத்ரின் பௌஸ்காயில், ஒருங்கிணைப்பாளர்
தகவல் தொடர்பு, சந்தைப்படுத்தல் மற்றும் ஈடுபாட்டுத் துறை
தொலைபேசி: 416-931-1712 மின்னஞ்சல் katherine.bousquail@vaughan.ca